# எஸ். ராமகிருஷ்ணன் சிறுகதைகளில் சுற்றுச்சூழல் மாசுபாடு

*ர. ஜெயப்பிரியா*
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, சேலம்

*முனைவர் மு. அனுசுயாதேவி*
இணைப் பேராசிரியர்
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, சேலம்

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI: https://doi.org/10.5281/zenodo.14958639

## முன்னுரை

நல்ல சூழல் மனிதனை உருவாக்கி மேம்படுத்தக்கூடியதாகும். சங்ககாலத்தில் தமிழர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்வை மேற்கொண்டனர். காலப் போக்கில் அறிவியல் வளர்ச்சி இயற்கையின் வீழ்ச்சிக்கு வித்திட்டது. தற்போது சுற்றுச்சூழல் நிலைபற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் மனித இனம் தள்ளப்பட்டுள்ளது.

இன்றைய அவசர உலகில் மனிதர்கள் தங்கள் உடல் நலத்தைப் பேணவும், தம் சுற்றத்தாருடன் மனம் விட்டுப் பேசி மகிழவும் போதிய நேரமிருப்பதில்லை. தமது வாழ்க்கையை இயந்திரமயமானதாக மாற்றிக் கொண்டு விட்டனர். காரணம் இன்றைய உலகின் நாகரீக வாழ்க்கைச் சூழலும் பொருளாதாரத் தேவையும் முக்கியப் பங்கு வகிக்கின்றது. தற்காலத்தில் அவசர வாழ்க்கையின் நிலையையும் அவற்றால் விளைவும் அழிவையும் எஸ். ராமகிருஷ்ணன் அவர்களின் சிறுகதைகள் சமுதாய அவலங்களைச் சுட்டிக் காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. இவற்றை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## சுற்றுச்சூழல் மாசுபாடு

மனிதர்களில் செயல்களால் உருவாகும் மாசுகளால் காற்று நீர், மண் வளங்களும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலையைக் குறிக்கும். சுற்றுச்சூழல் சமநிலை சீரற்றுப் போகும் நிலையைக் குறிக்கும். விஞ்ஞான மயமான அறிவியல் கண்டுபிடிப்புகளும் ஆக்கச் சிந்தனைகளும் மனிதனின் அறிவினை மழுங்கச் செய்துவிட்டன. நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என பஞ்சபூதங்களும் இன்று மாசடைந்துவிட்டன. இவற்றின் சீர்கேட்டைக் கண்கூடாகக் கண்டும் மனிதர்கள் தங்களை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. அறியாமையில் வாழும் மக்கள் விழிப்புணர்வு பெறவேண்டும் என்பதற்காக ஆசிரியர் “பெருநகரத் தவளைகள்” என்ற சிறுகதையை படைத்துள்ளார்.

“சிறுகதை என்பது ஒரேயொரு பாத்திரத்தின் நடவடிக்கைகளைப் பற்றியோ, ஒரு தனிநிகழ்ச்சியைப் பற்றியோ அல்லது ஒரு தனி உணர்ச்சி

தரும் விளைவைப் பற்றியோ எடுத்துக்கூறும் இலக்கியவடிவம், சிறகதை என்னும் வடிவம் தன்னளவில் முழுமை பெற்ற ஒரு தனிப்பிண்டம்"[1] என்பர். இச்சிறுகதை சுற்றுச்சூழல் மாசுபாட்டை மையமாகக் கொண்டு புனையப்பட்ட இலக்கியவடிவம் ஆகும்.

### தவளைகளின் வாழ்விடம் அழிந்துபோதல்

பெருநகரத் தவளைகள் என்ற சிறுகதை மக்கட் தொகைப் பெருக்கத்தின் விளைவுகளையும் நகரமயமான நாகரீக வாழ்க்கையின் சோகத்தையும் எடுத்துக்காட்டும் விதத்தில் படைக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்குப் பதினெட்டு லட்சம் பயணிகள் வருவதும் போவதுமாக உள்ள அந்த மாநகரில் இரண்டு தவளைகள் மட்டும் வசித்து வந்தன. ஒரு காலத்தில் அந்த நகரில் ஏழு ஏரிகள் இருந்தன. அதன் கரைகளிலும் தண்ணீரிலும் ஆயிரக்கணக்கானத் தவளைகள் வசித்தன.

### தவளைகளின் வாழ்விடம்

அந்தத் தவளைகள் தாங்கள் அழைப்பதால் மட்டுமே அதை அந்த நகரில் பெய்கிறது என்று நம்பிக்கொண்டிருந்தன. ஆனால் நகரம் பெரியதாக விரிவடைய ஆரம்பித்தவுடன் ஏரிகள் மூடப்பட்டு அந்த இடங்களில் உயர்ந்த நவீன கட்டிடங்கள், அடுக்குமாடி வீடுகள் உருவாகின. கிணறுகள், குளங்கள் யாவும் மூடப்பட்டு நீர்சேமிப்பு முற்றிலும் அழிந்து போன சூழலில் மீதமிருந்த தவளைகள் வாழ்விடம் தேடி வெளியேறின.

வெளியேற மனமில்லாத கிழட்டுத் தவளைகளைத் தேடிக் கொல்வதற்கு இரண்டு தன்னார்வ நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. அவை ஒன்றிரண்டு ஆண்டுகளில் அந்த நகரை தவளைகள் இல்லாத மாநகராக உருவாக்கி அரசின் உயர்ந்த பரிசினைப் பெற்றது. ஆயினும் புறநெருக்கடிகளைத் தாண்டி அந்த மாநகரில் இரண்டு தவளைகள் இருந்தன. அதில் ஒன்று மிக உயர்ந்த கட்டிடங்களில் ஒன்றான ரபேல் டவரின் எழுபது மாடி குடியிருப்பின் தண்ணீர்த் தொட்டியில் வசித்து வந்தது. பூமியில் இருந்து மிக உயரத்திற்குச் சென்று வசித்த முதல் தவளை அதுவாகத்தானிருக்கக் கூடும். குடியிருப்பில் வாழ்ந்து வருபவர்களின் கண்களில் படாமல் அங்கு அது வசித்து வந்தது. அந்த நகரின் மின்சார ரயில் ஒன்றின் கழிப்பறையில் மற்றொரு தவளை வசித்து வந்தது.

### தவளைகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்

ரயிலில் பயணம் செய்யும் பயணிகள் நாள்தோறும் தவளையின் மீது மூத்திரம் பெய்த படி இருந்தனர். ஒன்றையொன்று பார்த்தறியாத இரண்டு தவளைகளும் பரஸ்பரத்துடன் பேசிக் கொண்டன. ஒருவர் பேசுவது மற்றவர்க்குக் கேட்டது. தண்ணீர்த்தொட்டித் தவளை கூறியது, "நகரம் என்பது மாபெரும் கல்லறை... வீடுகள் இறுக்கமாக மூடிக் கொண்டு மூச்சுவிடக்கூட முடியாத நெருக்கடியில்தானிருக்கிறது. நகரில் வசிக்கும் மனிதர்கள் கரப்பான்பூச்சிகள் போன்றவர்கள். எந்த நெருக்கடிக்குள்ளும் வாழ்ந்துவிடுவார்கள். என்னால் அப்படியிருக்க முடியவில்லை எனக்கு வானம் தெரியவேண்டும். காற்று வேண்டும் மழை என்மீது பட வேண்டும்"[2]

"உடனே ரயில்தவளை அலுப்புடன் சொன்னது. நீ பரவாயில்லை. நான் இருக்குமிடம் மிக மோசமானது. மனிதர்கள் விடிகாலைத் துவங்கி நாள் எல்லாம் மூத்திரம் பெய்தபடி இருக்கிறார்கள். மனிதர்களைத் தவிர வேறு எந்த மிருகமும் மலஜலம் கழிக்க இவ்வளவு சிரமம் கொண்டது இல்லை. இவ்வளவு நேரத்தை வீணடிப்பதில்லை. மாநகர மனிதர்கள் மிகவும் ஆபாசமானவர்கள்"[3] மின்சார ரயில் என்பது ஓடிக்கொண்டேயிருக்கும் ஒரு அசுரமிருகம் என்றது.

### தண்ணீரை உறிஞ்சும் இயந்திரம்

அதற்குத் தண்ணீர்த் தொட்டி தவளை சொன்னது, நீயாவது பரவாயில்லை. நான் பிறந்தது முதல் தரையிறங்கி வந்து பார்த்ததில்லை. ஆகாசம் கூட தெரியாதபடி இரும்புப்பலகை கொண்டு தண்ணீர்த் தொட்டிப் பூட்டப்பட்டிருக்கிறது என்றது உலகில் தண்ணீரைப் பூட்டி வைக்கிறவர்கள் மனிதர்கள் மட்டும் தான்.

இந்த இரும்புக் கதவு வாரம் ஒருநாள் திறக்கும். அப்போது ஒரு இயந்திரம் மிகுந்த இரைச்சலோடு இதைச் சுத்தம் செய்யும். அந்த இரும்புக் கைகள் ஒருநாள் என்னையும் உறிஞ்சி விடும் என்று பயமாக இருக்கிறது என்றது.

நல்லவேளை ரயிலின் கழிப்பறைகளை சுத்தம் செய்வதில் மனிதர்கள் அதிக அக்கறை கொள்ளவில்லை. அதனால் நான் தப்பித்தேன். எனக்குத் தேவை ஒரு நல்ல தூக்கம். மனித மூத்திரம் உடலில் படாமல் உறங்க விரும்புகிறேன். அதற்குப் போக்கிடம் இல்லை என்றது. உடனே தொட்டித் தவளை நீ விரும்பினால் என் இருப்பிடத்திற்கு வந்து நிம்மதியாக உறங்கலாம் என்றது. அதற்கு ரயில் தவளை நீ விரும்பினால் ரயிலுக்குள் வந்த நகரினை சுற்றிக் காணலாம் என்றது. இரண்டும் ஒரு முழுவதும் யோசித்தன.

இரண்டு தவளைகளும் ஒன்றையொன்று சந்திப்பதற்கான நாளைக் குறித்துக்கொண்டன. தண்ணீர்த்தொட்டியை சுத்தம் செய்யும் இயந்திரத்தின் குழாயில் ஒட்டிக் கொண்டு தொட்டித் தவளை வெளியேறியது. அதுபோல கழிப்பறைத் தவளையும் பிளாஸ்டிக் காகிதம் ஒன்றில் தன்னை நுழைத்துக் கொண்டு தாவிக் குதித்து வெளியேறியது.

இரண்டு தவளைகளும் நகரின் வேறுவேறு பகுதியில் ஒன்றையொன்று தேடி அலைந்தன. நகரின் இரைச்சலும் வாகன நெருக்கடியும் பதற்றம் நிரம்பிய முகங்களையும் கண்டு இரண்டும் பயந்தன. நாமும் மனிதர்களைப் போல நடந்துகொள்கிறோம் என்று கடைசியில் தவளை சொன்னது. அருகே இருந்தும் நம்மால் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள முடியவில்லை நாம் திரும்பி அவரவர் இருப்பிடத்திற்குச் சென்றுவிடலாம் என்றது.

இரண்டும் அவசரமாக சாலையின் குறுக் கேத்தாவின. அதிவேகமான காரின் சக்கரத்தில் சிக்கி இரண்டும் நசுங்கிப் போயின. மறுநாள் காரில் பள்ளிக்குச் செல்லும் குழந்தையொன்று சாலையில் நசுங்கிக் கிடந்த தவளையைக் காட்டி அது என்னவென்று கேட்டது. குழந்தையின் அப்பா அது சாலையைக் கடக்கத் தெரியாத முட்டாள் தவளை என்றபடி சிரித்தார். குழந்தை பாவம் என்றது. உடனே அப்பா சாலை அசுத்தமாகிவிட்டது என்று முகம் சுழித்தபடி மகளோடு செல்லத் தொடங்கினார் என இச் சிறுகதை நிறைவு பெறுகிறது.

## தும்மலோசை என்ற சிறுகதை

தும்மலோசை என்ற சிறுகதை காற்று மாசுபாட்டை உணர்த்தும் வகையிலும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் எண்ணத்துடனும் படைக் கப்பட்டுள்ளது. ஜெமினி பாலத்தின் அருகில் இருந்த சிலைதான் முதன்முதலாக தும்மத் துவங்கியது. தும்மும்போது அதன் சப்தம் வாகன இரைச்சலில் யாருக்கும் கேட்கவில்லை. அடுத்தடுத்த தும்மல்களின் சத்தத்தால் அந்தச் சிலை அனைவரின் கவனத்தை ஈர்த்தது.

சிலைகளின் தும்மல்

போக்குவரத்துக் காவலர் வியப்புடன் சிலை அருகில் நின்றபடி அது ஏன் தும்முகிறது என்று புரியாமல் பார்த்தார். சூழல் சீர்கேடு அதிகமானதால் தான் சிலை தும்முகிறது என்று நினைத்துக் கொண்டு தானும் ஒருமுறை தும்மிக் கொண்டார். காவலர் வாகனப் பயணிகள் அனைவரும் அதை வேடிக்கை பார்த்தார்கள். மனிதர்கள் தும்மும் சப்தத்திலிருந்து பெரிதும் வேறுபட்டு இருந்தது. சில்லறைகள் கீழே விழுந்தால் எழும் சப்தத்தைப் போன்று விசித்திரமாக இருந்தது. காலையில் துவங்கிய சிலைகளின் தும்மல் இடைவிடாமல் நீண்டு கொண்டிருந்தது.

## தமிழ் அறிஞர்களின் தும்மலோசை

சிலைகளின் ஆரோக்கியம் குறித்து எவரும் எப்போதும் அக்கறை கொண்டதில்லை என்பதால் அந்தத் தும்மல் பெரிய விளைவுகள் எதையும் ஏற்படுத்தவில்லை. மாறாக அன்ற மாலை கடற்கரையில் இருந்த இரண்டு தமிழ் அறிஞர்களின் சிலைகளும் தும்மத் தொடங்கின. அதன் தும்மல் ஐம்பது ஆண்டு காலமாக உறைந்து கிடந்த சலனத்தைத் தூக்கி எறிவது போலிருந்தது.

இதைத் தொடர்ந்து வெல்லெஸ்பிரபுவின் சிலை பெரிய தும்மல் ஒன்றைப் போட்டது. அருகில் சிலையாக இருந்த வங்காள கவர்னர் கார்டன் நோபிள்ஸ் தன் குதிரையின் மீதிருந்தபடி தும்மினார்.

"கடலை விற்கும் சிறுமி சிலையின் தும்மலைக் கண்டு பரிகாசம் செய்தாள். நகரமெங்கும் சிலைகள் அடுக்குத் தும்மல் போடத்து வங்கியிருந்தன. சிலைகள் ஏன் தும்முகின்றன என்பதைப் பற்றிய ருசிகரமான விவாதங்கள் நடந்தன."[4]

இவைகளை மக்கள் நெருங்கி நின்று பார்த்தார்கள். புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். சிலைகள் தும்முவதைத் தவிர வேறு ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை பொது இடமெங்கும் சிலைகள் போலவே தும்மிக் காட்டும் பரிகாசம் நடந்தேறியது.

பேருந்தில் மின்சார ரயிலில் இந்த வேடிக்கையை எவராது செய்துகாட்ட பலரும் ரசித்தார்கள். பறவைகள் சிலைகளின் தும்மல் கண்டு பதறியோடின."5

ஒருவார காலம் நகரில் பகலிரவுகளாக தும்மி ஓய்ந்த சிலைகள் பின்பு எப்போதும் போல உறைந்து போயின. இப்போது கடற்கரை சாலையில் மட்டுமில்லாமல் நகரின் ஒவ்வொரு சிலையையும் கடந்து செல்லும் மனிதர்கள் அது தும்மப்போகிறதா என்று கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சிலைகளின்மீது கவனம் கொண்டு சிலைகள் தும்முவதைப் பார்க்கக் காத்திருக்கிறார்கள். சிலைகள் அதைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததோ என்னவோ என்று ஆசிரியர் இக்கதையை நிறைவு செய்துள்ளார்.

## முடிவுரை

பெருநகரத் தவளைகள் என்ற சிறகதையில் கிராமங்கள் நகரங்களாக மாறிவிட்ட சூழலும் ஏழு ஏரிகள் மூடப்பட்டு கட்டிடங்களாக மாறிய விதமும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. நீர் நிலைகளில் வாழும் உயிரினங்கள் அழிக்கப்படுவதும் சாலைகளில் போக்குவரத்து நெரிசலும் எதையும் கண்டுகொள்ளாத மனிதர்களின் இயந்திரத் தனமான வாழ்க்கையும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

தும்மலோசை என்ற சிறுகதை காற்று மாசினால் ஏற்பட்ட சூழல் சீர்கேட்டை சுட்டிக் காட்டுகிறது. சமுதாய அவலங்களைக் கண்டு அவற்றைக் களையும் பொருட்டு இக்கதைகளின் வாயிலாக மக்களுக்கு ஆசிரியர் விழிப்புணர்வை எற்படுத்துகிறார்.

## அடிக்குறிப்புகள்

1. நா. ஆறுமுகம், புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமர்சனம், ப. 4
2. எஸ். ராமகிருஷ்ணன் கதைகள், இரண்டாம் தொகுதி, ப. 337
3. எஸ். ராமகிருஷ்ணன் கதைகள், இரண்டாம் தொகுதி, ப.337
4. எஸ். ராமகிருஷ்ணன் கதைகள், இரண்டாம் தொகுதி, ப.392
5. எஸ். ராமகிருஷ்ணன் கதைகள், இரண்டாம் தொகுதி, ப. 392, 393